**CC. 351/2025 (PW. 1 )**
**அ.சா. 1 பொன்னம்மாள்**
**த/பெ.**
**நாள். 02.06.2026**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். நீதிமன்றம் புதிதாக 427 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்ததால் சாட்சி மீண்டும் எதிரிகள் தரப்பால் குறுக்குவிசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது. பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரிகள் ஆஜர் ).

**எ.த.கு.வி:–**

நான் முதல் விசாரணையில் கூறிய தகவல்கள் அனைத்தும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வெள்ளை தாளில் போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள், அதன் பிறகு கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு ஒரு புகாரை அவர்களே தயாரித்து கொண்டார்கள். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான்.

**அரசு தரப்பு மறுவிசாரணை**

எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் தற்போது அவர்களுடன் சமதானமாகி சென்றவிட்ட காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் அனைத்து உண்மைகளையும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமதானமாகி சென்று விட்ட காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**CC. 351/2025 (PW. )**
**அ.சா. 2 வெள்ளைசாமி**
**த/பெ.**
**நாள். 02.06.2026**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். நீதிமன்றம் புதிதாக 427 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்ததால் சாட்சி மீண்டும் எதிரிகள் தரப்பால் குறுக்குவிசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது. பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரிகள் ஆஜர் ).

**எ.த.கு.வி:–**

நான் முதல் விசாரணையில் கூறிய தகவல்கள் அனைத்தும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் எனது வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது வெளியே சத்தம் கேட்டவுடன் வெளியே வந்து பார்த்த போது யாரோ நான்கு நபர்கள் எனது வீட்டின் முன்பு கத்தி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். யார் எனது வீட்டின் முன்பு கத்தி கொண்டிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான்.

**அரசு தரப்பு மறுவிசாரணை**

எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் தற்போது அவர்களுடன் சமதானமாகி சென்றவிட்ட காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் அனைத்து உண்மைகளையும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமதானமாகி சென்று விட்ட காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.